UNIVERSITY OF JAFFNA LIBRARY
RECEIVED
1980-7
PERIODICALS DIVISION

பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 22 ஆடி 24 ஷஃபான் 24 இதழ் 149
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 8-7-80

வணசிங்கா இடமாற்றத்தை ஆட்சேபித்து உண்ணாவிரதம்!

மட்டக்களப்பில் நடத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. வணசிங்காவின் இடமாற்றத்தை ஆட்சேபித்து இம்மாதம் 19ம் திகதி மட்டக்களப்பில் ஒரு நாள் உண்ணாவிரதம் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து ஆலோசனை செய்ய நியமிக்கப்பட்ட உப குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

உப குழுவின் இம் முடிவை இம்மாதம் 11ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும், இலங்கை தமிழாசிரியர் சங்க கமிட்டிக் கூட்டத்தில் அங்கீகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மற்றும் சகல தொழிற்சங்கங்களையும் இந்த உண்ணாவிரத இயக்கத்தில் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. (ஈ)

பல்கலைக்கழக ஊழியர்களுக்கு

சம்பள உயர்வு

80 ஜனவரி முதல் அமுலுக்கு வரும்

[கொழும்பு]

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் ஊழியர்களது சம்பளம் அதிகரிக்கப்படும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகசம்பள ஆணைக் குழுவின் ஆலோசனையை அடுத்தே இச்சம்பள உயர்வு வழங்கப்படுகிறது.

இத்தகவலை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் செயலாளர் திரு. விஜயரத்ன பண்டார தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் உட்பட சகல ஊழியர்களுக்கும் கிடைக்க இருக்கும் இச்சம்பள உயர்வு இவ்வாண்டு ஜனவரி முதல் அமுலுக்கு வருமென்றும் அவர் தெரிவித்தார்.

புதிய சம்பள அதிகரிப்பு திட்டத்தின் படி சம்பள உச்சவரம்பு, வருடாந்த சம்பள உயர்வு ஆகியனவும் அதிகரிக்க பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சகல பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த எல்லா ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்க வேண்டுமென நீண்ட நாட்களாக கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது தெரிந்ததே [இ]

வீதியால்சென்றபெண்ணிடம் தங்கச்சங்கிலி கொள்ளை!

ஒருவர் காவலில்

(யாழ்ப்பாணம்)

வீதியால் சென்று கொண்டிருந்த வயோதிபப் பெண் ஒருவரைப் பயமுறுத்திவிட்டு அவரின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடியதாக் கூறப்படும் ஒருவர் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வழிப்பறியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மற்றொருவரைத் தேடி பொலிசார் வலைவிரித்துள்ளார்கள்.

யாழ்ப்பாணம் சந்தையில் வியாபாரம் செய்யும் தெய்வானை (வயது 65) என்பவர் இவ்வழிப்பறி சம்பந்தமாக யாழ். பொலிசில் புகார் செய்துள்ளார்.

அவர் தமது புகாரில் தெரிவித்துள்ளதாவது:-

சம்பவதினம் இரவு 7-30 மணியளவில் வியாபாரம் முடித்ததும் மானிப்பாய் வீதியால் எனது வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். ஒட்டுமடத் தடியில் சென்று கொண்டிருந்த போது இளம் வாலிபர் இருவர் சைக்கிளில் வந்து என்னைப் பயமுறுத்திவிட்டு எனது கழுத்திலிருந்த 4500 ரூபா பெறுமதிவாய்ந்த தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டோடிவிட்டனர்.

யாழ். பொலிஸைச் சேர்ந்த கான்ஸ்டபிள்கள் [illegible], விஜயசிங்கோன் ஆகி

[8-ம் பக்கம் பார்க்க]

யாழ்: கல்வி அதிபதிக்கு இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

வடமாநில வித்தியாதிபதி திரு. ரி. மாணிக்கவாசகர் இம்மாதம் 15ம் திகதி முதல் பதவியுயர்வுடன் கொழும்புக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

வடமாநில புதிய மாகாவித்தியாதிபதியாக திரு. [illegible] நியமிக்கப்பட்டுள்ளார். [ஈ]

கல்வி அமைச்சு 3 பிரிவுகளாக இயங்கும்

15-ம் திகதி முதல்

(கொழும்பு)

கல்வி அமைச்சு இம்மாதம் 15-ம் திகதி முதல் நான்கு பிரிவுகளாக இயங்கும்.

அமைச்சின் நிர்வாகத்தைப் பரவலாக்கி பணிகளை இலகுவாக்கும் பொருட்டே கல்வி அமைச்சு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படுவதாக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

நான்கு பிரிவுகளினதும் விபரம் வருமாறு:-

நிர்வாகப் பகுதியும் நிதிப் பகுதியும் ஒன்றாக இயங்கும். ஆசிரியர்கள் பயிற்சி, விசேட கல்வி, கல்வித்திட்டமிடல், ஆராய்ச்சி, பாடவிதானம், அபிவிருத்தி ஆகியன மற்றொரு

(8ம் பக்கம் பார்க்க)

மலகூடக் குழியில்

பொலித்தீன் பையில் சுற்றிய பெண் சிசுவின் சடலம்!

[யாழ்ப்பாணம்]

எட்டு மாத பெண் சிசுவின் சடலம் ஒன்று பொலித்தீன் பையில் கட்டியநிலையில் யாழ் கஸ்தூரியார் வீதியிலுள்ள வீட்டு, மலகூடகுழியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவ் வீட்டில் வாடகைக்கு குடியிருப்போர் குழியை சுத்தம் செய்யுமாறு தெரிவித்ததைத் தொடர்ந்து தொழிலாளர்கள் சுத்தம் செய்தபோது இச் சிசுவின் சடலத்தை கண்டெடுத்தனர்.

இத் தகவல் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் பொலிசாருடன் சென்று பார்வையிட்டார்.

சிசுவின் சடலத்தை யாழ் ஆஸ்பத்திரி சவச்சாலை

8-ம் பக்கம் பார்க்க)

சுவீப்முடிவுகள்

[கொழும்பு]

வெலிமடையில் நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 738-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
18 Q 0905
ரூபா 1 லட்சம்

இரண்டாவது பரிசு
08 U 0115
ரூபா 40 ஆயிரம்

மூன்றாவது பரிசு
26 D 0986
ரூபா 10 ஆயிரம்

தலா 1,198 ரூபா 80 சதம் கொண்ட ஆறுதல் பரிசுபெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

11 A 0002
19 A 0916
18 B 0071
29 B 0275
35 B 0836
15 C 0261
13 A 0976
13 B 0753
23 B 0729
34 B 0429
05 C 0491
17 C 0133

(8-ம் பக்கம் பார்க்க)

அமைச்சர் 'இராசு'வின் சைக்கிள் சவாரி

(மட்டக்களப்பு)

மட்டுநகர் முதல்வரும், பிராந்திய அபிவிருத்தியமைச்சருமான திரு. செ. இராசதுரை நகரில் நடைபெறும் தனதுவைபவங்களுக்கு இப்போது சைக்கிளில் வருகை தருகின்றார்.

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு நகரின் மத்தியிலமைந்துள்ள காந்தி பூங்காவில் நடைபெற்ற மாநகரசபை ஊழியர்கள் சிரமதானத்தில் பங்குபற்ற திரு. இராஜதுரை சைக்கிளில் வருகை தந்திருந்தார்.

"நீலனின் அறிக்கையை பின்பற்றியே மாவட்ட அபிவிருத்திசபை மசோதா"

ஆட்சியாளர் தெரிவித்ததாக 'சிவா' தகவல்

(கோண்டாவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபையில் மாவட்ட அபிவிருத்தி சபை பற்றிய பிரச்சினையை ஏற்று கொண்டவர்கள் சபைக்கு வெளியே வந்து அறிக்கை விடுகிறார்கள். நீலன் திருச்செல்வத்தை ஏன் மாவட்ட சபைவரைபுகுழுவில் அங்கம் வகிக்க நியமித்தீர்கள் என்று கேட்கிறார்கள். அவரே கேட்டிருக்க வேண்டும். மாவட்டமந்திரியின் கையில் [illegible] அறிக்கை மூலம் மாவட்ட மந்திரியின் அதிகாரம், மாவட்ட அபிவிருத்திசபை அதிகாரம் ஆகியன இருக்கும்போது [illegible] பகுதி அபிவிருத்தி [illegible] பதே எமது கோரிக்கை [illegible] ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு [illegible] இவ்வாறு மானிப்பாய்

பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் இணுவில் [illegible] இராம அபிவிருத்திச் சங்கத்தில் நடைபெற்ற [illegible] நூல் விமர்சனக் கூட்டத்தில் பேசு

8-ம் பக்கம் பார்க்க)

சிறு விளம்பரம்

விற்பனைக்கு

இக்கொத்தில் பாவிக்கப்பட்ட டீசல் மொறிஸ் LD 5 வான் விற்பனைக்குண்டு விலை ரூபா 62,000/- 37, நக்சா லேன், கண்டிக்குளி, போன்: 8171, இண்டர் ட்ரக் கொம்பனி, 295 காலி வீதி, கொள்ளுப்பிட்டி. போன்: 37697. [6167]

வொக்ஸ்வகன் கார்மொடல் 1300 9 ஸ்ரீ தொடர் இலக்கம் தேரில் வரவும் இல: 4, முதலாம் குறுக்குத் தெரு, வேம்படி மகளிர் பாடசாலைக்கு முன்பு யாழ்ப்பாணம் 6253

முழுவதும் மறுசீர் அமைக்கப் பெற்ற ஸ்கூட்டர் C 50 C 70, C 90 CD 125 உடன் விற்பனைக்குண்டு. CD 200 PLATING MODEL ஓடருக்குச் சேர்க்கப்படும் தொடர்பு கொள்க. சுபமங்களா மோட்டோர்ஸ் 79, கிராண்ட் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 7520 (6230)

வகுப்புகள்

G. C E. (O/L) மாணவருக்கும் பிறநாடு செல்பவர்களுக்கும் ஆங்கில இலக்கணம் இலக்கியம் (EMMA) (MCBETH) ஆங்கிலம் பேச்சு Spoken English தனிப்பட்ட முறையாயும் வீடுகள் சென்றும் கற்றுக் கொடுக்கப்படும். கடிதத் தொடர்பு நம். 6186, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம், 6186

தேவை

யாழ் நகரிலுள்ள சைவக் கல்லூரிக்கு ஆண் சமையற்காரர்கள் தேவை. உணவு இருப்பிட வசதிகள் உண்டு அனுபவம் சம்பளம் வயது மற்றும் விபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். குமணன் விளம்பர சேவை, 41, கோவில் பிள்ளையார் வீதி, யாழ்ப்பாணம் 6231

சு. நடராசா,
சட்டத்தரணியும்,
நொத்தாரிசும்,
"சத்தியஸ் தான்",
மல்லாகம்.

பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல. 84 அ — பிரிவுகள் 524, 532)

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற மாவிட்டபுரத்தைச் சேர்ந்த ஆலாலசுந்தரம் பெண் ஞானமணி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

தந்தையார் ஆலாலசுந்தரம், மாவிட்டபுரம்

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம்

இல. T/49

மேலேயுள்ள இலக்க மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு ஆடி மாதம் 11-ந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

மூ. நல்லலிங்கம்,
பதிவாளர்

1980-ம் ஆண்டு சித்திரை மாதம் 11-ந் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

6181

மடுயாத்திரிகர் சென்ற

லொறி குடைசாய்ந்து 13 பேர் காயம்

(மன்னார்)

மடுவுக்கு யாத்திரிகர்களுடன் சென்ற லொறியொன்று மடுவீதியிலுள்ள எச்பொருள் விற்பனவு நிலையத்திற்கு அருகில் உள்ள கட்டாற்றுப் பாலத்திலுள்ள குடைசாய்ந்தது. இந்த லொறியில் பிரயாணம் செய்த 15 பேர் காயமடைந்தனர். 3 பேர் உடனடியாக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இவ்விபத்து சம்பந்தமாக பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள் [ச]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

பிஸ்கால் ஏல விற்பனவு விளம்பரம்

மாவட்டமன்று மல்லாகம் வழக்கு இல: எம்.எஸ் 515
(M S 515)

மூர்த்தநம்பி தர்மலிங்கமும்
மனைவி ஈஸ்வரியும் வழக்காளி,
கொல்லங்கலட்டி.

எதிராக

இளையதம்பி சங்கரப்பிள்ளை கைம்பெண் சிவபாக்கியம், கொல்லங்கலட்டி மாவிட்டபுரம் தெல்லிப்பழை. இவர் மரணசாதனமின்றி இறந்த தனது கணவன் இளையதம்பி சங்கரப்பிள்ளையின் சொத்துக்கு நிர்வாகியாக,

எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றின் வழ: இல. MS 515 எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்ட ஆதனங்களை 1980ம் ஆண்டு ஆவணி மாதம் 6ம் திகதி பிற்பகல் 1மணி தொடக்கம் அந்தந்தக் காணியில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

47,369/-ம் இன்னும் முதல் ரூபா 32000/-க்கு 3-2-1975 தொடக்கம் 28-9-79 வரையும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 8% வீத வட்டியும் அதன் பின்னர் முழுத்தொகையும் அறுக்கப்படும் வரையும் கூட்டிய தொகைக்கு 5% வீத வட்டியும் வழக்குச் செலவும் அறிவிக்கப்படும்.

மூ. நல்லலிங்கம்,
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
மல்லாகம்.

ஆதன இடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று தெல்லிப்பழை மேற்கு இறை: அம்பலோலை நிலப்பரப்பு 34, ½ இணை பயிர் வகைகளும் இதற்கு எல்லை கிழக்கு பூதப்பிள்ளை இராசநாயகத்தின் காணி வடக்கு மாவிட்டபுரம் இறை மேற்கு இளையதம்பி பெண் பார்வதி அம்மைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு சின்னப்பு மகள் ஆச்சிமுத்துவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம் இவ்வெல்லைப்படி இதடங்கலிற் சொரியலாய் நிலப்பரப்பு 23ல் சொரியலாய் 2/3 பங்கும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

2. மேற்படி தெல்லிப்பழை மேற்கு இறை: அடுத்தவாலை நிலப்பரப்பு 9 குழி 10 · 8 இதற்கு எல்லை கிழக்கு இளையதம்பி சங்கரப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், வடக்கு சங்கரப்பிள்ளை சிவகானந்தனுக்குரிய ஆதனம், மேற்கு பாதைநிலம் தெற்கு நாகரத்தினம் பெண் பரமேஸ்வரிக்குரிய ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

3. மேற்படி தெல்லிப்பழை, மேற்கு இறை: நரங்குதேவன் கலட்டி நிலப்பரப்பு 14 குழி 8 · 6 இதற்குஎல்லைகிழக்கு வேலுப்பிள்ளை கைம்பெண் சின்னாச்சிக்கும் பங்காளருக்கும் சுந்தையா பெண் வள்ளிப்பிள்ளைக்கும் மறுபேருக்கும் உரிய காணிகள் வடக்கு ஒழுங்கை மேற்கும் தெற்கும் கைலொழுங்கை இவ்வெல்லைப்படி இதடங்கலிற் சொரியலாய் நிலப்பரப்பு 3ல் அதற்குச் சேர்ந்தவைகளும்.

4. மேற்படி தெல்லிப்பழை மேற்கு இறை: நரங்குதேவன் கட்டி நிலப்பரப்பு 3 இதற்கு எல்லை கிழக்கு றோட்டுவடக்கு சிவலிங்கம் விசாகப்பெருமாளுக்கும் பெண் புள்ளலட்சுமிக்கும் உரிய காணி மேற்கு சங்கரப்பிள்ளை பெண் ஆச்சிப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுரிய காணி தெற்கு சங்கரப்பிள்ளை விவேகானந்தனுக்குரிய காணி இவ்வெல்லைப்படி இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

5. மேற்படி தெல்லிப்பழைக் கோவிற்பற்று மாவிட்டபுரம் இறை: திரைப்பற்றை நிலப்பரப்பு 11, 5 8 பயிர் வகைகளும் இதற்கு எல்லை கிழக்கு இளையதம்பி இலகுப்பிள்ளைக்கும் மணிக்குமுரிய காணி வடக்கு கணபதி பயிரவிக்கும் பெண் தெய்வானைக்குமுரிய காணி மேற்கு பூதர் வல்லிபுரத்திற்கும் மறுபேருக்குமுரிய காணி தெற்கு இராசநாயகம் துரைசாமியின் காணி இவ்வெல்லைப்படி இதடங்கலும். காணியிலிருந்து கிழக்கேயிருக்கும் றோட்டிற்கு போக்குவரவு செய்வதற்கு இதன் கீழ்க் கூறப்படும் பாதை நிலங்களும்.

(அ) திரைப்பற்றை குழி 14 இதற்கு எல்லை கிழக்கு இளையதம்பி இரகுநாதனுக்கும் பெண் தங்கம்மாவுக்கும் உரிய காணிகளும் இதன் கீழ்க் கூறப்படும் காணியும் வடக்கு சிற்றம்பலம் சுந்தரத்துக்கும் மறுபேருக்குமுரிய காணி மேற்கு மயிலு சின்னையாவுக்கும் பெண் தெய்வானைக்குமுரிய காணி தெற்கு மேற்கூறிய காணி இதடங்கலும்.

(ஆ) திரைப்பற்றை குழி 17, ½ இதற்கு எல்லை கிழக்கு சிற்றம்பலம் சுந்தரத்துக்குரிய காணி வடக்கு குறித்த சுந்தரத்துக்குரிய காணி மேற்கு மேலே (அ) வில் கீழ் கூறப்பட்டிருக்கும் காணி தெற்கு இளையதம்பி இரகுநாதனுக்கும் பெண் தங்கம்மாவுக்குமுரிய காணி இவ்வெல்லைப்படி இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

6 மேற்படி மாவிட்டபுரம் இறை: [illegible] குழி 11, ½ இதற்கு எல்லை கிழக்கு றோட் வடக்கு வயிரவப்பிள்ளை கந்தப்பிள்ளையின் உரிமைக்காரரின் காணி மேற்கும் தெற்கும் சங்கரப்பிள்ளை பெண் [illegible] பங்காளருக்கும் உரிய காணி இவ்வெல்லைப்படி இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

62[illegible]

அடுத்தமாதம்

யாழ். வருகிறார் பிரதமர் பிரேமா!

[கொழும்பு]

அடுத்த மாத முற்பகுதியில் பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார் என்று தெரிகிறது.

ஆறு வருடங்களுக்குப் பின்னர் பிரதம மந்திரியொருவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வது இதுவே முதற்தடவையாகும்.

முன்னாள் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா 1974ம் ஆண்டு அக்டோபர் முற்பகுதியில் யாழ். வளாகத்தைத் திறந்து வைப்பதற்காக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் பிரதமமந்திரி பிரேமதாசா சாவகச்சேரி நவீன சந்தை, கன்பொல்லை மாதிரிக் கிராமம் ஆகியவற்றைத் திறந்துவைப்பதுடன் யாழ். மக்களின் தேவைகள்பற்றியும் அவர்களின் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் வழிவகைகள்பற்றியும் ஆராய்வார் எனத் தெரிகிறது.

பிரதமமந்திரிக்கு வரவேற்பளிப்பதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது. [வெ]

ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் சு / 14066 இலக்க வழக்கில் வாதி சுதுமலை சின்னத்தம்பி தம்பிஐயாவுக்கு விற்பனவு திகதிவரை சேரவேண்டிய தீர்வைத்தொகை 9426 ரூபா 94 சதமும் வழக்குச் செலவு 525 ரூபா 80 சதமும் விற்பனவுச்செலவுகளும். இதில் 19-6-75ல் கொடுபட்ட 2000/- கழித்து மிகுதித் தொகையை பிரதிவாதி சுதுமலை இளையதம்பி செல்லையாவிடம் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1980ஆம் ஜூலை மாதம் 30ந் (30-7-80) புதன்கிழமை காலை பத்துமணி தொடக்கம் அவ்வாதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

ஆதனவிபரம்: வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பிரிவு மானிப்பாய்க் கோவிற்பற்று சுதுமலை இறை "மல்லாலன் தோட்டம்" E 91/15 பதிவிலுள்ள நிலப்பரப்பு 3¾ ம், E 374/75 பதிவிலுள்ள நிலப்பரப்பு 2½ யும் சேர்ந்து மொத்தமாக நிலப்பரப்பு 6¼ம் பனைகளும் பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு சின்னத்தம்பி கந்தசாமியினுதனம், வடக்கு இளையதம்பி இராசலிங்கத்தினுதனம், மேற்கு கணபதிப்பிள்ளை பெண் கனகம்மாவினுதனம், தெற்கு ஒழுங்கை. இது முழுவதும்.

வ. இ. மகாதேவன்.
விற்பனை, ஆணையாளர்
ஏலவிற்பனையாளர்

553, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம். 6250

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோடு

வழக்கு இல: M B11182

இராசாவின் தோட்டம் றோட்டு, யாழ்ப்பாணம். — M. P. S. உருத்திரராசா வழக்காளி

எதிராக

பலாலி றோட்டு. யாழ்ப்பாணம். — வைரவி மார்க்கண்டு எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB 11182-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1980-ம் ஆண்டு ஆடி மாதம் 25-ம் திகதி (25-7-80) வெள்ளிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை

ரூபா 3,570/-ம், 15-10-69 தொடக்கம் 25-1-70 வரைக்கும் ரூபா 2,000/-க்கு 12 வீத வட்டியும், அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுபடும்வரை 5 வீத வட்டியும், வழக்குச் செலவு ரூபா 269-11 சதமும்.

ஆதனவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் பகுதியும், வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென் கிழக்கு இறை, "மாணிக்கவளவு" நில பர 2 ஆளுக்கு உத்தரவு பெற்ற உலாந்தா S ஏரம்பநாதரினால் 13-3-63ல் தயாரிக்கப்பட்ட படத்தின்படி நில. பர 2 குளி 01, 7/10. இதில் 2-ம் துண்டான நில. பர 0-குளி 15, 6/10 இந்த பிரிக்கப்பட்ட துண்டு நில பர 0-குளி 15, 6/10-ம் வீடும் செய்பயிர் வான்பயிரும் மற்றும் உடைமைகளும் இந்தக் காணியில் வட கிழக்கு மூலையிலிருக்கும் கிணற்றில் பங்கும். எல்லை கிழக்கு மேற்படி படத்திலுள்ள 3ம் துண்டான 06, 5/10 குளி கொண்ட போது ஒழுங்கை. வடக்கு மேற்படி படத்திலுள்ள 1ம் துண்டான கணபதிப்பிள்ளை கண்ணப்பனுதனம், மேற்கு சந்தையா பெண் பூரணம் தெற்கு பொன்னம்பலம் பெண் சரஸ்வதி. இதடங்கலும் அத்துடன் மேற்படி படத்திலுள்ள 3ம் துண்டான ஒழுங்கையால் போகவும் வரவுமுள்ள உரிமையும் D 289/20ல் பதியப்பட்டது

செ. பாண்டித்துரை, L. I. V.
கோர்ட் ஏலவிற்பனையாளர்.

[illegible].
16-6-80

6251

மணிவாக்கு

சத்தியம்போல் உயர்வான மதமும், சிறிய நற்குணமும் சிறந்த தர்மமும் விலை மதிப்புள்ள பொக்கிஷமும் வேறில்லை.

— சுவாமி சிவானந்தர்

மக்கள் கருத்து

மன்னார்ப் பட்டினத்தின் அவல நிலை

எழில் மிக்க ஈழத்திருநாட்டில் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்த இயற்கை எழில் கொஞ்சும் இடம் மன்னார் மாவட்டம். இம்மாவட்டம் அபிவிருத்தியடையாது, முன்னேற்றமின்றிக் காட்சியளிக்கின்றது.

செந்நெல் விளை மாதோட்ட நகர், பாடல் பெற்ற திருக்கேதீஸ்வரம், வரலாற்றுக் கோபுரம், அகழ்சூழ் கோட்டை, அலங்காரப் பாலம், முத்து விளையும் கடல், மருதமடு மாதா ஆலயம், தென் ஆபிரிக்க மாலுமிகளால் உற்பத்தி செய்யப்பட்டதாகக் கூறப்படும் சரித்திரப் பிரசித்தி பெற்ற மன்னார் பள்ளிமுனை பெருக்குமரம் - இத்தனை சிறப்புக்களையும் கொண்ட மன்னார் மாவட்டம் அபிவிருத்தியடையாமல் இருப்பது ஆச்சரியத்துக்குரியதாக இருக்கிறது.

மன்னாரில் இயங்கிவரும் மன்னார் பொதுச்சந்தை முப்பது வருடப்பழமைவாய்ந்தது. பிரதமர் உட்பட எத்தனையோ அமைச்சர்கள் வந்துபோன பின்புகூட அந்த நிலையில் கட்டிடங்களில் வெடிப்புகள் விழுந்து, மரங்கள் முளைத்து கட்டிடங்கள் உடைந்த நிலையில் காட்சியளிக்கின்றது. இச்சந்தையின் பின்புறம் வெளிச்சமின்றி இருளடைந்த நிலையில் இன்றுமிருக்கிறது.

மன்னார் வீதிகளைப் பார்த்தால் ஏனைய இடங்களைவிடப் படுமோசமாகக் காணப்படுகின்றன. எந்த வீதியைப் பார்த்தாலும் குழிகளும் குன்றுகளுமாக அவை வீதிகளாகக் காட்சியளிக்கின்றன.

மன்னாரில் பொது மலசலகூடங்கள் இருந்தும் இல்லாத நிலை மன்னார் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. பஸ் நிலையத்திலுள்ள மலசலகூடம் இடிக்கப்பட்டு பல வருடங்களாகியும் இன்னமும் கட்டப்படவில்லை. சின்னக்கடை, பனங்கட்டிக் கொட்டு வட்டாரங்களிலுள்ள மலசலகூடங்கள் பாவிக்க இன்றிக் காணப்படுகின்றன.

மன்னாரிலுள்ள தபால் பெட்டிகளெல்லாம் உடைந்த நிலையில் பழுதடைந்து கிடக்கின்றன. மன்னார் தேசியப் பேரவை உறுப்பினர் இருக்கும் வயல் வீதிச் சந்தித் தபால் பெட்டி, உப்புக்குள வட்டாரச் சந்தித் தபால் பெட்டி ஆகியன தபால் போட முடியாதவாறு உடைந்த நிலையில் உள்ளன.

மன்னாரில் சுகாதாரமும் மோசமடைந்துள்ளது. வீதிகளில் குப்பைகூழங்கள், வடிகால்களில் துர்நாற்றம், பெரியகடை பள்ளிவாசலருகில் தேங்கி நிற்கும் சாக்கடை நீர் நாற்றம், வடிகால்களில் சுத்தப்படுத்தாத அழுக்குகள், காலைமாலை வருவோர் மூக்கைப் பிடித்துக்கொண்டு போகுமளவிற்கு சுகாதாரம் படுமோசமடைந்துள்ளது.

இருட்டில் நடமாடும் இப்பட்டினத்தில் சில சந்திகளில் வெளிச்சமில்லை. ஆகவே மன்னார்ப்பகுதி அதிகாரிகளும் மன்னார் பாராளுமன்ற உறுப்பினரும் இது விஷயத்தில் கவனம் செலுத்தி, மன்னார் அபிவிருத்தியடைய ஆவன செய்ய வேண்டும்.

வி. பிரான்சிஸ்
பொறுப்பாளர்,
பாதுகாப்புச் சேவை.
மன்னார்.

காரை - பூலோகங்காடு

குழாய் நீர்த்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினர்!

நோர்வே பிரமுகரும் கலந்து கொண்டார்

(சித்தன்கேணி)

ஈ-ரோர் அபிவிருத்தித்திட்ட வேலை முறைகளுக்கிணங்க நோர்வே தேசத்து லிபரல் கட்சி பாராளுமன்றச் செயலாளர் திரு. நுட்திவெஸ்ராட் காரைநகர் - பூலோகங்காடு குழாய் நீர்த்திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.

இவ்வைபவம் கடந்த 2ம் திகதி புதன்கிழமை காலையில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. சடாட்சர சண்முகதாசன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவை வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சார்பில் யாழ்ப்பாணத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். இவ்விழாவில் ஈ-ரோர் அபிவிருத்தித் திட்ட முகாமையாளர் திரு. ஸ்ரனிலெளஸ், வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரின் அந்தரங்கச் செயலாளர் திரு. ந. க. பத்மநாதன் ஆகியோர் உட்பட பலர் பங்குபற்றி உரையாற்றினார்கள். இத்திட்டத்திற்கான நிதியை (1 லட்சத்து 68 ஆயிரம் ரூபா) நோர்வே தேசத்து நவிலோமுக்க வாலிபர் இயக்கத்தின் சார்பில் திரு. நுட்திவெஸ்ராட் வழங்கினார்.

திரு நுட்திவெஸ்ராட் பேசும்போது இப்படியான திட்டங்களுக்கு நாம் முழுமனதுடன் உதவிபுரிவோம் என்றும் தனக்கு இப்படியான சிறந்த வரவேற்பு அளித்தமைக்கு நன்றியும் தெரிவித்தார்.

யாழ் எம். பி. திரு. யோகேஸ்வரன் பேசும்போது நோர்வே தேசத்து மக்களுக்கும் நமக்கும் இடையே அனேக வருடங்களாக தொடர்புகள் இருக்கின்றன என்றும் ஈ-ரோர் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் அத்தொடர்புகள் நீடிக்கின்றன என்றும் இவ்வுதவியை எமக்கு செய்து வருகின்ற நோர்வே தேசத்து மக்களுக்கு தமிழ் மக்களின் சார்பிலும் தமது இயக்கத்தின் சார்பிலும் நன்றியைக் கூறுவதாகவும் சொன்னார். களபூமி சனசமூகநிலையச் செயலாளர் நீ. கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார். வாணிசிறுவர் பாடசாலை மாணவமாணவிகளுடைய நடனநிகழ்ச்சியும் இடம்பெற்றது.

அ. லி. சே. சங்க யாழ். கிளை 10ம் திகதி கூடும்

(பண்டத்தரிப்பு)

அரசாங்க லிகிதர் சேவைச் சங்க யாழ் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 10ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம் சின்னமாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கிளைத் தலைவர் திரு. வே. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் தாய்ச்சங்கப் பிரமுகர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். பேராளர் மகாநாட்டிற்கான பேராளர்கள் தெரிவும் இக்கூட்டத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ)

மாவட்டமந்திரி முயற்சி

(மன்னார்)

மூதூர் எம். பி.யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்றூப் எருக்கலம்பிட்டியில் உள்ள வீதிகளை திருத்தியமைக்கும் வேலைகளை மேற்கொண்டு வருகிறார். (ஈ)

மடு உற்சவத்தில் 3 லட்சம் யாத்திரீகர்

(மன்னார்)

இவ்வருடம் மடுமாதா ஆலயத்தில் விமரிசையாக நடைபெற்ற திருவிழாவில் சுமார் 3 லட்சம் யாத்திரீகர்கள் கலந்துகொண்டார்கள் எனத் தெரியவருகிறது.

இம்முறை நடைபெற்ற திருவிழாவில் இடம்பெற்ற கூட்டுப் பரிஸ் வைபவத்தில் யாழ்ப்பாணம் மேற்றிராணியார் ஆண்டகை அதி வண. தியோகுப்பிள்ளையும் பாப்பரசின் ஸ்தானாபதியும் இலங்கையின் ஹைகமிஷனராகப் பணிபுரியும் ரெசீனு (டெலிகட்) ஆண்டகையும் திருவிழா பாடற் பூசையிலும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். (ஈ)

'மீன்விலைக்கு கட்டுப்பாடு விதிக்கவும்'

(மன்னார்)

எருக்கலம்பிட்டிப் பகுதியில் கூடிய விலைக்கே மீன் நிறுத்து விற்பனை செய்யப்படுகிறது. மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு இதுவும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. இதனை முன்னிட்டு மீனவரின் ஆலோசனையுடன் மீனின் தரத்திற்கேற்ப [illegible] மற்றும் நிர்ணயிக்கும் விலைப்படி நிறுத்து விற்கவேண்டும் என்னும் உபவிதியை அமுலுக்குக் கொண்டுவந்து நடவடிக்கை எடுக்க நகராட்சி மன்றம் முன்வரவேண்டுமென்று வரியிறுப்பாளர் கோருகின்றனர். (ஈ)

……

தும்புத் தொழிற்சாலை

(மன்னார்)

எருக்கலம்பிட்டியில் தும்புத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மூதூர் எம். பி.யும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்றூப் மேற்கொண்டு வருகிறார்.

தும்புத்தொழிற்சாலை அமைக்கும் இடம், மூலப் பொருட்கள் பெறும்வழி ஆகியனபற்றி எருக்கலம்பிட்டிப் பகுதியில் உள்ள பொதுநல இயக்கங்களின் பிரமுகர்களுடன் மூதூர் எம். பியும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்றூப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

சீதனக் கொடுமையை ஒழிக்க

அறவழிப் போராட்டக் குழுவின் புதியநடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சீதனம் இன்றி திருமணம் செய்யவிரும்புகின்ற இளைஞர்களின் பட்டியல் ஒன்றை அறவழிப் போராட்டக்குழு தயாரித்து வருகிறது.

அறவழிப்போராட்டக் குழுவின் சீதன ஒழிப்புத் திட்டத்தின்கீழ் முதற்படியாக வடமாகாணத்தில் சீதனக்கொடுமையின் தாக்கங்களால் தாக்கப்பட்டு வாழ்விழந்து வாழ்கின்ற இளம் பெண்களின் விபரங்களைத் திரட்டிய பின்னர் சீதனம் இன்றித் திருமணம் செய்ய விரும்புகின்ற இளைஞர்களின் பட்டியலைத் திரட்டி பொருத்தமான இடத்து இவர்களுக்குத் திருமணங்களை நடத்திவைக்க அறவழிப் போராட்டக்குழு முடிவுசெய்துள்ளதாகத் தெரிகிறது.

அறவழிப் போராட்டக்குழுவினரின் இத்திட்டம் சிறந்த முறையில் நடைபெற சகலரினதும் ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளது.

சீதனப் பிரச்சினையினால் வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் குழுவுடன் தொடர்பு கொள்ளலாம். விபரங்கள் இரகசியமாகப் பாதுகாக்கப்படும் எனக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

வடபகுதியில் சகல சமூகத்தவர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் நோய்கள் பற்றிய சகல விபரங்களையும் அறவழிப் போராட்டக் குழு திரட்டுகின்றது. குழு உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள பிரச்சினைகள் தொடர்பாக பல்வேறு மக்களினதும் அபிப்பிராயங்களைத் திரட்டி உடன் நடவடிக்கைகளில் இறங்கவுள்ளனர்.

ஏற்கனவே பல ஆலயங்கள் திறந்து விடப்பட்டுள்ளதாலும் சிலர் பொய்யான தகவல்களை அடிக்கடி மக்களிடத்திலேகூறி சாதித்துவேஷத்தை வளர்த்து வருவது காணக்கூடியதாகவுள்ளது என்றும் அவ்வப் பகுதிவாழ் மக்களின் உண்மை நிலைகளைத் தெரிந்து கொண்டு தொடர் நடவடிக்கைகளில் ஈடுபட அறவழிப்போராட்டக்குழு ஆலோசித்து வருகின்றதாம்.

புதிய தலைவர்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு வர்த்தகர் சமாசத்தின் புதிய தலைவராக திரு. மு. நடராசா ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். முன்னர் தலைவராக இருந்த திரு. எஸ். சின்னராசா தமது பதவியை இராஜினாமா செய்ததை அடுத்து அண்மையில் கூடிய வர்த்தகர் சமாசச் செயற்குழு திரு. மு. நடராசா தலைவராக தெரிவு செய்தது. (அ)

இன்று சிறப்புரை

(சுழிபுரம்)

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் கார்த்திகைத் திருவிழாவையொட்டி இரவு பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவிலில் இளைப்பாறிய ஆசிரியரான ஓதுவார் மு. கிருஷ்ணபிள்ளை ஆசிரியர் "கந்தரநுபூதி" என்னும் பொருள் பற்றி சிறப்புரையாற்றுவார். முருக நாம பஜனையும் நடைபெறும். (அ)

மணிவாசகர் குருபூசை

(மன்னார்)

இம்மாதம் 11ம் திகதி மணிவாசகர் குருபூசை தினத்தை மன்னார் சிறீ சித்தி விநாயகர் ஆலயத்தில் மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கம் கொண்டாடவுள்ளது.

அன்றைய தினம் மாலை விசேட பூசையைத் தொடர்ந்து பண்டிதர் திரு. மு. ஞானப்பிரகாசர், திரு. சி. சண்முகவடிவேல் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெறவிருக்கின்றன. (ஈ)

தேசிய இளைஞர் சேவை மன்ற வாரம்

(மன்னார்)

மன்னார் தேசிய இளைஞர் சேவை மன்ற வாரம் சிறப்பாக நடைபெற வேண்டிய ஏற்பாடுகளை தேசிய இளைஞர் சேவை மன்ற மன்னார் மாவட்ட திட்ட அலுவலர் திரு. [illegible] செய்து வருகிறார்.

மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் தேசிய சேவை மன்ற வாரம் இம்மாதம் 14ம் திகதி தொடக்கம் 19ம் திகதி வரை நடைபெறும். (ஈ)

"தனி கி. சே. அ. பிரிவாக்குக"

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பொன்னாலை-[illegible] பகுதிக்குத் தனியான கிராம சேவை அலுவலர் பிரிவு நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கு வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. அ. திருநாவுக்கரசுவின் சார்பில் யாழ் தொகுதி எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் எழுதியுள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

மொறற்ருனியாவில்

அடிமை முறை முற்ருக ஒழிப்பு

நௌக்சட், ஜூலை 7 மொறற்ருனியாவில் அடிமை முறை இறுதியாக ஒழிக்கப்பட்டுள்ளது. அடிமைமுறைகள் இங்கு ஒழிக்கப்பட வேண்டுமென்று முஸ்லிம் வழக்கறிஞர்கள் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறியதையடுத்து அடிமைமுறை ஒழிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் அடிமைகளை வைத்திருந்த முதலாளிமாருக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டுமென்றும், வழக்கறிஞர்கள் மொறற்ருனியா அரசாங்கத்திற்கு சிபார்சு செய்துள்ளனர். (வெ)

பெல்கிரேடில்

கூட்டுச்சேரா நாடுகளின் பிரதிநிதிகள் மகாநாடு

பெல்கிரேட், ஜூலை 7 கூட்டுச்சேரா நாடுகளின் உணவு, விவசாயப்பிரச்னை சம்பந்தமான மூன்று நாள் மாநாடு நேற்று பெல்கிரேட்டில் ஆரம்பமானது.

வளர்முக நாடுகளின் உணவு, விவசாய வளர்ச்சி பற்றி ஆராய்ந்து உணவு விவசாய திட்டமொன்று இம்மாநாட்டில் வகுக்கப்படும்.

பலஸ்தீன, யூகோஸ்லேவியா உட்பட 15 நாடுகள் இம்மாநாட்டில் கலந்துகொள்கின்றன. (வெ)

ஜாப். வரும் தலைவர்களுக்கு பலத்த பாதுகாப்பு

டோக்கியோ, ஜூலை 7 அண்மையில் காலமான ஜப்பானியப் பிரதமர் ஒஹிராவின் மரணம் தொடர்பான மத வைபவங்களில் கலந்துகொள்வதற்காகப் பெருந்தொகையான வெளிநாட்டுத் தலைவர்கள் ஜப்பான் வந்துள்ளனர்.

இவர்களுக்குப் பலத்த பாதுகாப்பு ஜப்பானிய அரசாங்கத்தால் அளிக்கப்பட்டுள்ளது.

சுமார் 50 நாடுகளின் தலைவர்கள் மதவைபவங்களில் கலந்துகொண்டு, ஜப்பானியப் பிரதமருக்கு அஞ்சலி செலுத்துவர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் வரும் வெளிநாட்டுத் தலைவர்களுள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மிகார்ட்டரும், சீனப் பிரதமமந்திரி ஹுவா குவா பெங்கும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவ் இரு தலைவர்களும் இன்று நாளை மறுதினம் சந்தித்து உலகின் பல்வேறு பிரச்னைகள் குறித்தும், அமெரிக்க-சீன உறவுமுறை குறித்தும் பேச்சுவார்த்தை நடத்துவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. (வெ)

"பயாப்ரா 'நிலைமை இங்கும் ஏற்படவேண்டுமா?"

தலைமையின் நிலைமைபற்றி அமிர் மீண்டும் விளக்கம்

(மட்டுவில்)

"எமது இனத்தின் விடுதலையை எந்த நேரத்திலும் காண முடியும் என்று சிந்தித்து செயலாற்ற வேண்டுமேதவிர நான் குறித்த பத்திரிகை மூலம் அறிக்கைகள் விட்டோ அல்ல. எமது தம்பிமாரின் வேகம் அதிகரித்துள்ளது மகிழ்ச்சிக்குரியது. ஆனால் அதை விவேகமாக்க வேண்டியது இயக்கத்தின் தலைவர்களின் கடமை. இதை இளைஞர்கள் நன்கு புரிந்து கொள்ளவேண்டும்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மட்டுவிலில் பேசும்போது குறிப்பிட்டார்.

மட்டுவில் வடக்கு ஸ்ரீ கண்ணகை நூல் நிலையத்தின் பொதுக் கூட்டத்தின் போது, அமரர் தந்தை செல்வாவின் உருவப்படத்தை திரை நீக்கம் செய்து வைத்து திரு அமிர்தலிங்கம் பேசினார்.

நிலையத் தலைவர் திரு. க. கந்தசாமி தலைமையில் வைபவம் நடைபெற்றது. சாவகச்சேரி எம். பி திரு வி. என். நவரத்தினம், தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர் திரு. கணேசலிங்கம் செயலாளர் திரு சிவராஜா திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உட்பட பலர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது:

வேகமும் விவேகமும்

இன்று இளைஞர்கள் மிகவும் வேகமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அதை விவேகமாக்க வேண்டியது தலைவர்களின் கடமை. கனடா ஸ்கொட்லண்ட் போன்ற நாடுகள் சுயாட்சியை விரும்பின ஆனால் அங்கு சுயாட்சியை விரும்பிய மக்களுக்கு யாரும் தொந்தரவு செய்யவோ அவர்களுக்கு அழிவுசெய்யவோ முயன்றது கிடையாது. ஆனால் நமது நாட்டில் அந்த நிலை இல்லை. தேர்தலின் பின் நமது நாட்டில் குழப்பநிலை இருந்ததை நாம் மறந்துவிடக் கூடாது.

பயாப்ரா என்ற நாட்டில் அந்த மக்கள் சுதந்திரம்பெற விரும்பினர், தமது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தனர். இதன் பயனால் அவர்களுக்கு உதவி எதுவும் கிடைக்கவில்லை. உணவின்றி பட்டினியால் வாடினர். ஈற்றில் பட்டினி காரணமாக அவர்கள் சரணடைந்தனர், சுதந்திரப் பிரகடனத்திற்குத் தலைமைதாங்கியவர் வேற்றுநாட்டிற்கு ஓடி தலைமறைவாக வேண்டிய நிலை உருவானது.

நாமும் எமது சுதந்திரத்தை வேகமாகப் பிரகடனம் செய்ய முடியும். அதேநேரத்தில் நாம் நமது பலத்தை பற்றிச் சிந்திக்க வேண்டும். நாம் எமது பலத்தைப் பெருக்க வேண்டும். அதற்கு மக்கள் இயக்கத்தில் விசுவாசம், கட்டுப்பாடு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் இயக்கத்தை வளர்க்க வேண்டும். தவிர ஒவ்வொருவரும் தனிவழி செல்வதல்ல.

களையெடுப்பதா பயிர்பிடுங்குவதா?

களையைப் பிடுங்குவதற்குப் பதில் பயிர்கள் பிடுங்கப்படுவதாகச் சிலர் கூறுகிறார்கள். களைகளைப் பிடுங்குவது இயற்கை ஆனால் அநியாயமாக பழுதான பயிர்கள் இருந்தால் அப்பயிர்களையும் கட்டாயம் பிடுங்கத்தான் வேண்டும். ஆனால் இதற்காக நாம் யாரையும் வெளியே போடுவது என்பது அர்த்தமல்ல. நாம் வெளியிலுள்ளவர்களைக் கூட அவர்கள் இயக்க கருத்துக்களை ஏற்றுக்கொண்டால் திருப்பவும் சேர்த்துக்கொள்ளத் தயாராக இருக்கிறது எமது இயக்கம். எமது இயக்கம் அறிவுடைமையுடன் இயங்கி, அழிவுதரும் வழிகளை விலக்கி மக்களை நல்வழியில் வழிநடத்தவே கடமையாகக் கொண்டது.

சதுரங்கம்

எமது தம்பிமார் போரா சதுரங்கமா என்று ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளதாக அறிகிறேன். ஆனால் அது [illegible] இடைக்கிடையே எமது போராட்டமும் சதுரங்கப் போராட்டம்தான். சதுரங்க விளையாட்டில் ஒரு சதுரத்திலிருந்து வேறு சதுரத்திற்கு காயை நகர்த்தும்போது நாம் எவ்வளவு பாதுகாப்பாகச் செய்யவேண்டும். காய் நகர்த்தியதும் அந்த சதுரத்திற்கு வேறு காய் வராமலும் நகர்த்த

(5-ம் பக்கம் பார்க்க)

சமாதான நீதவான்



(யாழ்ப்பாணம்)

மானிப்பாயைச் சேர்ந்த திரு. சுப்பையா கதிர்காமத்தம்பி அண்மையில் சமாதான நீதவானாக யாழ். மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிருஷ்ணர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் இருபது ஆண்டுகள் மானிப்பாய்ப் பட்டினசபையில் அங்கத்தவராகவும், அதில் சில ஆண்டுகள் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். இவர் மானிப்பாயில் பாலர் சேமநலத்துவ நிலையமொன்றை நடாத்துவதற்கும் உதவி புரிந்துள்ளார்.

இவர் மானிப்பாய் மருதடி விநாயகர் கோவில் வருடாந்த உற்சவகாலத்தில் ஒரு தொண்டர் படையைத் திரட்டி அதற்கு தலைவராகவுமிருந்து சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டினார்.

பிரபல சமூக சேவையாளராகத் திகழ்ந்த இவர் மானிப்பாய் மக்களின் முன்னேற்றம் கருதி தேசிய சேமிப்பு இயக்கமொன்றைத் தொடக்கி அவ்வூர் மக்களிடையே சேமிப்பு முக்கியத்தை ஊக்குவித்தார். இவர் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டதை யொட்டி மானிப்பாய் வாசிகள் இவருக்கு பாராட்டு வைபவமொன்றை நடாத்தினர்கள்.

சவர்க்காரப் பார்சலுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வீதி சோதனை சுற்றிவளைப்பில் போலிசார் சந்தேகத்திற்கிடமான நிலையில் பெட்டியொன்றைச் சுமந்து சென்ற ஒருவரைத் தடுத்து நிறுத்தி விசாரணை செய்து அவரிடமிருந்த 100 சவர்க்காரக் கட்டிகளைக் கைப்பற்றினர்.

யாழ். பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் முனிதாசா, கான்ஸ்டபிள்கள் நந்தசேன, குணசேகரா ஆகியோர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவில் ரோந்து சுற்றிவரும்போது நாவலர் சந்திக்கண்மையில் ஒருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் பாரமான பார்சல் ஒன்றைக் கொண்டுசெல்வதைக் கண்டு அவரைத் தடுத்து விசாரணைக்குட்படுத்தினர். சந்தேகநபர் யாழ்ப்பாணத்திலுள்ள சவர்க்காரத் தொழிற்சாலை ஒன்றில் வேலைசெய்து வருபவர் என்றும் சம்பவதினம் அவர் தான் வேலைசெய்த தொழிற்சாலையிலிருந்து சவர்க்காரப் பார்சலை திருடினாரெனவும் தெரியவந்ததாம்.

விசாரணையின் பொருட்டு இவர் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். [கொ-வி]

நெடுங்காலப் பாவனைக்குகந்த உறுதிமிக்க உருக்கினாலான

உன்னத தர சைக்கிள்!

"லண்டனெக்ஸ்"

100 °/. ஜப்பானில் தயாரிக்கப்பட்ட பைசிக்கிள்

துணை உறுப்புகள் சகிதம் கிடைக்கும்

சகாய விலை ரூபா 1400-00

விலைமாற்றம் வருமுன் பெற்றுக்கொள்ளவும்.

இந்தியாவின் அதி சிறந்த பைசிக்கிளான
"ஹீரோ"
மீண்டும் வந்துவிட்டது
தேவைக்கு முந்துங்கள்
விலை 875-00

பிரகாசம் மிக்க இவப்பு, பச்சை, நீலம் ஆகிய நிறங்களில்
"ஸ்பேஸ்மென்"
பைசிக்கிள் சொற்பதொகையே கையிருப்பில் உண்டு.
விலை 850-00

துணை விநியோகஸ்தர்கட்கு விசேஷ சலுகை
மேலதிக விபரங்கட்கு தொடர்பு கொள்க:

சிற்றி சைக்கிள் ஹவுஸ்

77, டாம் வீதி,
தொலைபேசி: 35761

கொழும்பு 12.

மட்டக்களப்பின்

அபிவிருத்திக்கு ஒதுக்கிய நிதி உரிய முறையில் செலவிடப்படவில்லை

அமைச்சர் 'இராசு' கவலை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்படுகின்ற நிதி உரிய முறையில் செலவிடப்படுவதில்லை.

புயலின் பின்பு புனரமைக்கப்பட்ட முதல் பாடசாலையான மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி கனிஷ்ட பிரிவைத் திறந்துவைத்து உரையாற்றிய மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரை குறிப்பிட்டார்.

கடந்த சனிக்கிழமை கல்லூரி அதிபர் திருமதி இளையதம்பி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

1979ம் ஆண்டு நவம்பர் 23ம் திகதி ஏற்பட்ட புயலினால் எதிர்பாராத அழிவு ஏற்பட்டது இப்புயலினால் 60 ஆயிரம் வீடுகள் அழிந்தன. 400க்கு மேற்பட்ட இந்து, முஸ்லிம், பௌத்த கிறிஸ்தவ வழிபாட்டு தலங்கள் அழிந்தன. ஆயிரக்கணக்கில் கால்நடைகள் மடிந்தன. 740 பேர் உயிரிழந்தனர். 171 பாடசாலைகள் தரைமட்டமாகின.

ஏனைய மாவட்டங்களைவிட ஏற்கனவே பின்தங்கி இருந்த நாம் மீண்டும் பின்னுக்குத் தள்ளப்பட்டோம்.

இந்த அழிவின் பின்பு எமது பகுதியை நாம் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டுமென்ற உந்துதலாகவே அயராது உழைத்து வருகின்றோம்

புயலின் பின்பு எமது பகுதி அபிவிருத்தி அடையவில்லை வேண்டுமென்றே அரசியல்வாதிகள் குறை கூறுகிறார்கள் ஆனால் பணம் ஒதுக்கப்பட்டும் உரியவிதத்தில் செலவிடப்படாமல் பணம் திருப்பி அனுப்பப்படுகின்றது

இவ்வேதனையை நான் யாரிடம் கூறுவேன்

1978ம் ஆண்டு அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட 50 லட்சம் ரூபா பணம் செலவிடப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டது. அதேமாதிரி கடந்த வருடம் 100 லட்சம் ரூபாவில் 75 லட்சம் ரூபா செலவிடப்படவில்லை இந்த வேதனையையும், சுமையையும் நான் யாரிடம் சொல்வேன் பணம் எவ்வளவு தான் வேண்டுமானாலும் பெற்றுத்தர முடியும். ஆனால் பணம் செலவிடப்படாமல் திருப்பி அனுப்புவதால் என்ன பயன்?

புயலின் பின்பு பல தொழிற்சாலைகள் திருத்தப்பட்டன மீனவர்கட்கு உதவிகள் வழங்கப்பட்டன இழந்த உயிர் ஒவ்வொன்றிற்கும் 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது வழிபாட்டுத்தலங்களுக்கு புனரமைப்பு நிதி வழங்கப்பட்டன பாடசாலைக் கட்டிடங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன அந்தவகையில் முதல் கட்டிடமாய் இப்பாடசாலைக் கட்டிடம் திறந்து வைக்கப்படுகின்றது இதனைத் தொடர்ந்து ஏனையவையும் திறந்து வைக்கப்படும்.

மற்றும் இவ்வைபவத்தில் கிழக்கு ஆயர் ஜே. கே. [illegible], வட்டாரக்கல்வி அதிகாரி திரு கே ஜே முத்துராஜா, திரு. சா. இ கமலநாதன் உட்படப் பலர் உரையாற்றினர்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன (இ)

42 மாதச்சிறை என்றதும் ஜீவனாம்சம் செலுத்தினர்

(ஊர்காவற்றுறை)

தமது ஐந்துவயதுச் சிறுவனுக்குத் தான் செலுத்த வேண்டிய 4,800 ரூபா ஜீவனாம்சப் பணத்தைச் செலுத்த முடியாது என மறுத்த ஆணுக்கு 42 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இதனை அடுத்து அந்த இளைஞர் நூறு ரூபாவைச் செலுத்தி மீதிப் பணத்தைச் செலுத்துவதற்கு தவணை கோரினார் இதைத் தொடர்ந்து அவருக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையை ரத்துச்செய்த நீதவான் மிகுதிப் பணத்தைச் செலுத்துவதற்கு தவணை வழங்கினார்.

இவ்வழக்கில் காரைநகரைச் சேர்ந்த ஆறுமுகம் வேலுப்பிள்ளை என்பவர் தமக்கும் அதே இடத்தைச் சேர்ந்த அன்னம் என்ற இளம்பெண்ணுக்கும் பிறந்த ஆண்பிள்ளைக்கு தம்மால் ஜீவனாம்சம் செலுத்த முடியாது என ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் தெரிவித்தார். இதையடுத்து அவர் செலுத்தவேண்டிய ஒவ்வொரு நூறு ரூபாவுக்கும் ஒருமாத விதம் 42 மாத சிறைத்தண்டனை நீதிபதி கே. என் திலகன் விதித்தார் ஆயினும் சிறிது நேரத்தில் நூறு ரூபாவைச் செலுத்தத் தயாராக இருப்பதாக அவர் தமது சட்டத்தரணி மூலம் நீதிபதிக்குத் தெரிவிக்கப்பட்டதையடுத்து வழக்கு மீண்டும் எடுக்கப்பட்டு பணமும் செலுத்தப்பட்டது. சிறைத்தண்டனையை ரத்துச் செய்த நீதிபதி மீதிப்பணத்தைச் செலுத்துவதற்கு ஒருமாத கால அவகாசம் வழங்கினார்

இவ்வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் பல வருடங்களுக்கு முன்னர் விசாரணை செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட பிள்ளையின் தந்தை பிரஸ்தாப இளைஞர் தான் என நிரூபிக்கப்படவில்லை என்பதால் வழக்கைத் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது இதனை ஆட்சேபித்து அந்த இளம் பெண் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு செய்துகொண்ட மேன்முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட பிள்ளையின் தந்தை இந்த இளைஞர்தான் என்றும் பிரஸ்தாப பிள்ளைக்கு ஜீவனாம்சப்பணமாக மாதம் 75 ரூபா இவ்விளைஞர் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட திகதியிலிருந்து செலுத்தவேண்டும் எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் சமீபத்தில் உத்தரவு பிறப்பித்து இருந்தது. இப்பணத்தைச் செலுத்துவது தொடர்பாகவே இவ்வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் வழக்காளியின் சார்பில் சட்டத்தரணி திருமதி வி. ஸ்ரீகாந்தாவும் எதிரியான இளைஞரின் சார்பில் சட்டத்தரணி திருமதி எஸ். இளங்கோவனும் ஆஜரானார்கள்.

(க)

அபிவிருத்தி கருத்தரங்கு

(மட்டுவில்)

இலங்கை மன்றக்கல்லூரியும் யாழ். பல்கலைக்கழகமும் தென்மராட்சி நிறுவனமும் இணைந்து இம்மாதம் 11, 12, 13-ம் திகதிகளில் கைதடியிலுள்ள யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் மூன்று நாள் அபிவிருத்திக் கருத்தரங்கை நடத்தவுள்ளன

பேராசிரியர் [illegible] ஜெயசிங்கம் தலைமையில் இலங்கை மன்றக்கல்லூரி தலைவர் திரு [illegible] பெருமாவின் வரவேற்புடன் ஆரம்பமாகும் இந்தக் கருத்தரங்கில் சாவகச்சேரி எம் பீ திரு வி என், நவரத்தினம் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

தென்மராட்சி அபிவிருத்தி பற்றிய இந்தக் கருத்தரங்கில் வெளிநாட்டு ஸ்தாபனப் பிரதிநிதிகள் முதல் மத்திய [illegible] திரு. சி. லோகநாதன் பேராசிரியர் இரு கே. [illegible] உட்பட 75 பிரதிநிதிகள் கலந்து கொள்வர். [illegible]

வெளிநாடுசெல்ல பணம் கொடாததால் இளைஞர் தற்கொலை

[பண்டத்தரிப்பு]

வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லத் தாயாரிடம் பணம் தருமாறு கேட்டு வற்புறுத்திய வாலிபர் ஒருவர் பணம் கிடைக்காத போகவே மனமுடைந்து நஞ்சருந்தித் தன்னுயிரை மாய்த்துக் கொண்ட பரிதாபகரமான சம்பவம் கொக்குவில் மேற்கில் நடைபெற்றுள்ளது.

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சோமசுந்தரம் கிரிதரன் என்ற 28 வயதான பிரஸ்தாப இளைஞரின் மரணவிசாரணை திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் கனகரத்தினம் முன்னிலையில் நடைபெற்றது.

அத்தருணம் காலஞ்சென்றவரின் தாயார் சோமசுந்தரம் சரஸ்வதி சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது!

"காலஞ்சென்ற எனது மகன் தான் வெளிநாடு சென்று வேலைபார்க்க விரும்புவதாகவும், அதற்குப் பணம் தருமாறும் என்னிடம் கேட்டார். நான் அதற்கு மறுப்புத் தெரிவித்து எனது தங்கையின் கலியாணம் விரைவில் நடக்கவிருக்கிறது, ஆகவே பணம் எதுவும் இப்போதைக்கு எடுக்க முடியாது என்று கூறினேன் இதனால் அந்த இரவாட்டம் அவர் மிகவும் மனமுடைந்திருக்கக் காணப்பட்டார். சம்பவதினத்தன்று காலை 8 மணியாகியும் அவர் படுக்கையை விட்டு எழும்பாதபடியால் நாங்கள் அவரின் அறையைத் திறந்து பார்த்தோம். அங்கு அவர் இறந்துகிடக்கக் காணப்பட்டார் இவரது மரணத்தில் எமக்கு எவர்மீதும் சந்தேகம் இல்லை"

காலஞ்சென்றவரின் தமக்கை இந்துமதியும் சாட்சியமளித்தார். பிரேத பரிசோதனை நடத்திய யாழ் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ் சரவணபவானந்தன் சாட்சியமளித்தபோது காலஞ்சென்றவரின் வயிற்றிலுள்ள உறுப்புகள் கொழும்புக்கு இரசாயன பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டன

விசாரணை முடிவில் மரண விசாரணை அதிகாரி நஞ்சருந்தியதால் ஏற்பட்ட தற்கொலை என்று தீர்ப்பு வழங்கினார். சாட்சிகளை [illegible] பொலிஸைச் சேர்ந்த கான்ஸ்டபிள் எம். நாதன் ஆஜர் செய்தார்.

"பிஞ்சு உள்ளங்களைப் பாதிக்கும்

ஆபாசக் குப்பைகளைத் தடைசெய்ய வேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"நாட்டின் எதிர்கால சுபீட்சத்திற்கு வழி கோல்வதற்குப் பதில் அவர்களின் பிஞ்சு மனங்களை மூப்படையவைக்கும் ஆபாசப் பிரசுரங்கள், பேய் பசாசு, பூதம் போன்ற கதைகளை முன்வைத்து அவர்களின் மனதில் பயத்தையும் ஏக்கத்தையும் ஏற்படுத்தும் வெறும் பயங்கரக்கதைவடிவங்களும் தடுக்கப்பட வேண்டியவை இதை அரசும் கலைப்படைப்பாளிகளும் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும்"

திருமலை இந்துக்கல்லூரி மாணவர் இலக்கியமன்றம் ஒழுங்கு செய்த கூட்டத்தில் "கலை, இலக்கியம், மாணவன்" என்ற தலைப்பில் பேசியபோது திரு. கே. டானியல் இவ்வாறு குறிப்பிட்டார்

மொழி என்ற ஒரு தொடர்பினூடாகத் தென் இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் சீழ்மட்ட சஞ்சிகைகளும் வர்த்தகசேவை என்ற முறையில் எமது நாட்டு வானொலி மூலம் தரப்படும் பாட்டுக்குப் பாட்டு என்ற நிகழ்ச்சியில் நடைபெறும் இனிமையான பாடல் போன்ற நிகழ்ச்சிகளும் எமது நாட்டு இளம் மாணவ மாணவிகளுக்கு போதை வஸ்துக்களாக அமைந்துள்ளன.

தலைப்பிள்ளை எதை இது அறியக் கூடாது என்று தாய் விரும்புகிறாரோ, அது மிக இளமையில் கடைகளில் கிடைக்கும் ஐந்து சதம் பெறுமதியில் [illegible] அதன் முடிவு எங்கே போய் நிற்கும் என்பதனை மாணவ உலகம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (உ)

பணிப்பெண்ணை எஜமான் சப்பாத்துக்காலால் தாக்கினாராம்

[யாழ்ப்பாணம்]

வீட்டு எஜமானனால் சப்பாத்துக்காலால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் பணிப்பெண் ஒருவர் கால்முறிந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

சண்டிலிப்பாயைச் சேர்ந்த சின்னராசா [illegible] 10 வயது என்ற சிறுமி நுணாவிலைச் சேர்ந்த ஆசிரியர் [illegible] என்பவரின் வீட்டில் பலவருடங்களாக வேலைசெய்து வந்ததாகவும் சம்பவதினம் பகல் சிறுமி வீட்டுப் பலாமரத்தடியில் நின்று கொண்டிருந்ததைக் கண்ட எஜமான் கோபமுற்று அச்சிறுமியை சப்பாத்துக்காலால் உதைத்ததாகவும் அதைத் தொடர்ந்து சிறுமி பலாமரத்தில் மோதுண்டு அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது

சிறுமியைப் பரிசோதனை செய்த டாக்டர் கால்முறிந்திருப்பதை அறிந்து விசாரணை செய்தபோது அவர் எஜமானால் தாக்கப்பட்டது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து சிறுமி ஆஸ்பத்திரிப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்

யாழ். ஆஸ்பத்திரிப் பொலிசாரிடம் சிறுமி தனிப்பட்ட வாக்குமூலத்தில் சம்பவதினம் எஜமானர் தன்னைத் தாக்கியதாகவும் பின் அவரின் மனைவி தன்னை யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்து அனுமதித்ததாகவும் அப்போது எஜமான் தாக்கியதாகக் கூற வேண்டாம் என்றும் கிணற்றடியில் விழுந்ததாகக் கூறும்படி கூறியதாகவும் தான் தான் தாக்கப்பட்டதை வெளியில் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

யாழ் ஆஸ்பத்திரிப் பொலிசார் இதுசம்பந்தமாக சாவகச்சேரிப் பொலிசாருக்கு அறிவித்துள்ளனர் சாவகச்சேரிப் பொலிசார் இதுசம்பந்தமான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர் சிறுமி தொடர்ந்தும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார். [செ]

அடுத்த மூன்று ஆண்டுகளில்

மன்னார் அபிவிருத்திக்கு சாத்தியமில்லையாம்

[மன்னார்]

அடுத்த மூன்று வருடகாலத்திற்குள் மன்னார் மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நிறைவேறும் சாத்தியக்கூறுகள் இல்லையென்று மன்னார் மாவட்ட நலன்நோக்குச் சங்கம் ஆழ்ந்த கவலையும் அதிருப்தியும் தெரிவித்துள்ளது

மன்னார் நாகன் படமாளிகையில் கலாநிதி [illegible] தலைமையில் நடைபெற்ற மன்னார் மாவட்ட நலன்நோக்குச் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் மன்னார் மாவட்ட அபிவிருத்தியின் செயற்பாடு பற்றி பேசிய பல உறுப்பினர்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டனர்

பிரதமர் ஆர். பிரேமதாசா உட்பட அமைச்சர்கள் மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் செய்தார்கள். பின் தங்கிய மாவட்டமான மன்னார் மாவட்ட [illegible] நிலைமை நேரில் கண்டார்கள். கேட்டும் அறிந்தார்கள் மன்னார் மாவட்டத்திற்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களை அறிந்தார்கள். அபிவிருத்தி வேலைகள் விரைவில் செயல்படுமென உறுதியளித்துச் சென்றார்கள்.

ஆனால் நிலைமையோ வேறுவிதமாக இருக்கிறது மன்னார் மாவட்ட அபிவிருத்தி வேலைகள் ஆமை வேகத்திலேயே நடைபெற்று வருகின்றது ஏட்டளவில் இருக்கும் திட்டங்கள் முழு உருவம் பெறவில்லை என்றும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது

பயபரா...

(4ம்- பக்கத் தொடர்ச்சி)

[illegible] எமது போரா[illegible] வுக்கு வழியின்றி [illegible] திரு அமிர்தலிங்கம் கூறினார்.

தெல்லிப்பழையில் இன்று உதைபந்தாட்டம்

(தெல்லிப்பழை)

எம் ஏ. வெற்றிக்கிண்ணத்திற்காக லங்கா உதைபந்தாட்டச் சங்கத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியின் பூர்வாங்கச் சுற்றுப்போட்டியாக தெல்லிப்பழை மஹாஜனாவின் விளையாட்டுக் கழகம், கொழும்பு மாநகர [illegible] விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடுகின்றது இப்போட்டி இன்று பிற்பகல் மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். [ ]

இந்தியாவில் வெள்ளப்பெருக்கு: முக்கிய நதிகள் சீறிப்பாய்கின்றன

தமிழ்நாட்டிலும் பாதிப்பு

புதுடில்லி, ஜூலை 7

இந்தியாவின் பல மாநிலங்களிலும் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

கங்கைநதியிலும், பிரமபுத்திராவிலும் நீர்மட்டம் உயர்ந்து வெள்ளப்பெருக்கு அபாயம் தோன்றியுள்ளது.

நாட்டின் பல பகுதிகளிலும் பெய்த இடைவிடாத மழையினால் 40 [illegible] சேதமடைந்துள்ளன.

தமிழ்நாட்டில் சேலம் மாவட்டத்தில் பல குடிசைகள் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டன.

குஜராத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் 20 பேர்வரை இறந்துள்ளனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்களை வழங்குவதில் மத்திய, மாநில அரசுகள் ஈடுபட்டு வருகின்றன.

சில மாநிலங்களில் நீர்மட்டம் அபாயகரமான அளவை எட்டி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களில் பலர் பாடசாலைகளிலும், சமயக்கட்டிடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். சிலர் மரங்களின் மேல் ஏறி, வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்படாமல் தம்மைப் பாதுகாத்துக் கொண்டனர்.

தொண்டர்களும், சமூக சேவைக் குழுவினரும் வெள்ள மீட்புப் பணிகளில் துரிதமாக ஈடுபட்டு வருகின்றனர். (வெ)

ஒலிம்பிக்போட்டிகள்:

யு. எஸ். பற்றி சோவியத் சந்தேகம்

மாஸ்கோ, ஜூலை 7

அடுத்தவாரம் மாஸ்கோவில் ஆரம்பமாகும் ஒலிம்பிக்போட்டியின் போது மேற்கு நாடுகள் சோவியத்யூனியனுக்கு எதிராகத் தூண்டுதல் பிரசாரங்களை விநியோகித்து குழப்பமான நிலையை உருவாக்கலாமென்று சோவியத்யூனியன் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க சி ஐ ஏ. ஸ்தாபனம் இது சம்பந்தமான நாசவேலைகளில் ஈடுபடலாமென்றும் சோவியத் யூனியன் தெரிவித்துள்ளது. (வெ)

வெளிநாடுகளிலுள்ள ஈரானிய ராஜதந்திரிகள்

இஸ்லாமிய முறைப்படி நடந்து கொள்ளவேண்டும்!

தெஹ்ரான். ஜூலை. 7

ஈரானிய ராஜதந்திரிகள் இஸ்லாமிய சம்பிரதாயங்களுக்கேற்ப வெளிநாடுகளில் நடந்து கொள்ள வேண்டுமென ஈரானிய அரசாங்கம் கேட்டுள்ளது.

தனிப்பட்ட முறையிலும், பொது வைபவங்களின்போதும் இஸ்லாத்திற்கு மாசு கற்பிக்காத வகையில், வெளிநாட்டிலுள்ள ஈரானிய ராஜதந்திரிகள் நடந்துகொள்ள வேண்டுமெனவும் ஈரானிய அரசு வற்புறுத்தியுள்ளது.

பொது வைபவங்களில் கலந்துகொள்ளும் ஈரானிய ராஜதந்திரிகளின் மனைவிமார் அனுமதிக்கப்படுவரெனவும் அரசு கூறியுள்ளது.

ஈரானிய பண்பாட்டிற்கும், இஸ்லாத்திற்கும் தீங்கு விளைவிக்காத முறையில் ஈரானிய ராஜதந்திரிகளின் மனைவிமார் உடையணிந்து பொது வைபவங்களில் கலந்து கொள்ளவேண்டுமெனவும் அவ்வரசு குறிப்பிட்டுள்ளது.

ஈரானிய ராஜதந்திரிகள் நடாத்தும் எந்த ஒரு வைபவத்தின் போதும் மதுபானம் பரிமாறப்படக்கூடாதென்றும் ஈரானிய அரசு அவர்களுக்குத் தெரிவித்துள்ளது. (வெ)

சங்கக் கடையில் திருட்டு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க [illegible] பொத்தும் கட்டி விதிக்கிளையில் இரவு வேளையில் ஓட்டைப் பிரித்து உள்ளிறங்கிய

(7-ம் பக்கம் பார்க்க)

மீண்டும் வந்துவிட்டது...
பழைய பிரியமிக்க
ஹஸ்லின் ஸ்னோ
இளிர்ச்சியும், மென்மையும் சருமத்திற்கு மிருதுவானது
உங்கள் சருமத்தைப்பேணிப் பாதுகாக்க மீண்டும் வந்து விட்டது. ஹஸ்லின் ஸ்னோ. ஹஸ்லின் ஸ்னோவை உங்கள் சருமத்தில் தடவியதும் அது செயற்படுவதை உணர்வீர்கள். இது எண்ணெய்ப் பற்று அற்றதாகும். இழந்த குளிர்ச்சியை மீட்பதுடன், இது சருமத்தில் வரட்சியையும், வெடிப்பையும் தடுத்து தழும்புகளை அகற்றி, அழகையும் சௌந்தரியத்தையும் ஏற்படுத்தி, மென்மையான மிருதுவான சருமத்தை அளிக்கிறது.
இன்றே ஒரு சாடியை வாங்குங்கள் சகல சிறந்த கடைகளிலும் கிடைக்கும்.
ஏக விநியோகஸ்தர்கள் 'ஹஸ்லின் ஸ்னோ'
ஷோ வலஸ் அன்ட் ஹெட்ஜெஸ் லிமிட்டெட்
கொழும்பு 3
விலை ரூ. 18-60 வெல்கமின் ஒரு தரமான தயாரிப்பு Wellcome

நேபாளம் ஆதரவு

டாக்கா, ஜூலை 7

பங்களாதேஷ் கூட்டவிருக்கும் ஆறுநாடுகளின் பிராந்திய ஒருமைப்பாட்டு மகாநாட்டிற்கு நேபாள வெளிநாட்டமைச்சர் ஆதரவு தெரிவித்துள்ளார்.

ஆசிய நாடுகளின் அரசியல், பொருளாதார பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இம்மாநாடு வழிவகுக்குமெனவும் நேபாள வெளிநாட்டமைச்சர் நேற்று டாக்கா விமானநிலையத்தில் வைத்துத் தெரிவித்தார். (வெ)

குடிசை தீக்கிரை!

(மன்னார்)

ஒரு மீனவக்குடும்பத்தை குடிபெயர்க்கும் நோக்கத்துடன் சிலர் தொல்லை கொடுத்து வந்தனராம். இறுதியில் அந்தக் குடிசை தீக்கிரையானது.

தலைமன்னார் பியர் கடற்கரையில் குடிசையமைத்து கருவாடு காயவைத்து வாழ்க்கை நடத்திவந்த இந்த ஏழைமீனவ குடும்பத்தைக் குடியெழுப்பி அந்த இடத்தைத் தாம் கைப்பற்றுவதற்கென அக்குடும்பத்திற்கு அடிக்கடி தொல்லை கொடுத்து வந்த சிலர் இறுதியில் அக்குடிசைக்கே தீ மூட்டியிருக்கலாம் என இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது. தெய்வாதீனமாக இக்குடும்பம் உயிர் தப்பியது. அயலில் உள்ளவர்களின் உதவியுடன் குடிசைக்குள் இருந்த சில பொருட்களும் மீட்கப்பட்டன. குடிசை முற்றாக எரிந்து விட்டது.

இது சம்பந்தமாகப் பொலிசார் விசாரணை மேற்கொண்டபோது மேற்கண்ட தகவல் தெரியவந்தன. பொலிசார் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்ததுடன் மேலும் இருவரைத்தேடி வருகின்றனர். (ஈ)

செல்லா [illegible]
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர்-விஜயா
நல்லநேரம்

[illegible] [illegible]
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 3-45
எஸ். எம். ஆர்-விஜயகுமாரி
அவன் பித்தனா?

ஹரன் [illegible]
சிவாஜி-விஜயகுமாரி
குங்குமம்
புதிய பிரதி

SANTHI JAFFNA Phone 7642
Daily 5 Shows
SIDNEY POITIER — BILL COSBY
"Let s Do it Again"
Color — Action — Suspense — Comedy
A FILM FOR FAMILY ENTERTAINMENT.

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மினி
நடித்த
நான் வணங்கும் தெய்வம்

SRIDHAR JAFFNA
Daily 5 Sh ws 10-30 am, 2-00, 4-30, 7-00 & 9-30 p.m.
For Centuries they were Hunted for Bounty,
Fun and Food......
NOW IT'S THEIR TURN!
Day of the Animals
(For Adults only)
மனிதர்களை மிருகங்கள் வேட்டையாடும் பயங்கர
காட்சிகள் நிறைந்த படம்
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

RAJAH (JAFFNA)
Daily 10-30, 2-30, 4 45, 7-15
& 9-45
PAUL VICTOR'S BEST SELLER
NOW A MAJOR E. M. I FILM
From the depth of space they came to vanish beneath the sea.........An Action packed under sea adventure, as you have never seen before!
DOUG Mc CLURE with PETER GILMORE
in
WAR LORDS OF
ATLANTIS
(More Suitable for adults)
(NO PASSES)

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-படாபட்
6-ல் இருந்து
60 வரை

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-சுஜாதா-[illegible]
ஞானக்
குழந்தை

மகத்தான 10-வது வாரம்
ராணி (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் (இருவேடங்களில்) ஸ்ரீதேவி
கல்யாண ராமன் (கலர்)

யாழ். வின்ஸர் வெண்திரையில்
தினசரி 10 30, 1-30, 4-30, 7-00
125 வது நாளை நோக்கி வெற்றி நடைபோடுகிறது. முறியடிக்க முடியாத வகையில் வசூலில் இன்னும் முன்னணியில் நின்று மலர்ந்தவண்ணமிருக்கின்றது.
பாரதிராஜாவின்
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

இன்றைய பலன்

ஆனி மாதம் 24-ம் திகதி
[செவ்வாய்க்கிழமை]
[8-7-1980]

மேடம்: குறுக்கு வழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்ளக் கூடும். திரைமறைவில் உங்கள் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும்.

இடபம்: பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும். இருட்டில் பயத்துக்கும் இடமுண்டு. விவசாயிகள் முன் எச்சரிக்கையுடன் இருக்கவும். காணிப் பிணக்குக் கவலையைத் தரலாம்.

மிதுனம்: பொறுமையற்ற மனத்துடன் இருப்பீர்கள். எதிலும் நிறைவு தென்படும். முதியவர் ஒருவரின் அறிவுரை உங்களுக்குப் புதியபாதையைக் காட்டும். குடும்பத்திலும் அன்பு தவழும்.

கடகம்: வேண்டியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நீண்டநாள் பிணி இன்று விடைபெறும். குடும்பத்திலும் மகிழ்ச்சி உண்டு.

சிம்மம்: வேண்டிய அளவுக்கு இன்று வெளிப்பணம் துள்ளும். மாதுரு வழியில் பெருமைக்கு இன்று இடமுண்டு. மனம்போல் யாவும் நடக்கும். இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் கிடைக்கும்.

கன்னி: போதுமென்ற மனத்துடன் புறப்படுவீர்கள். பிறருக்கு உழைப்பதில் உவகை ஏற்படமுடியும். இலர் வேதாந்தப் பேச்சையும் விரும்பக் கூடும். வீட்டிலும் நல்ல சூழ்நிலை நிலவும்.

துலாம்: இதயம் எரிச்சலாகும். எதிரிகள் தாக்குவர். ஏமாற்றத்திற்கு இடமுண்டு. எனினும் இருள்சூழ்ந்த நிலையிலும் ஒளிக்கோடுகள் தென்படலாம். அதிக பேச்சைத் தவிர்த்து காரியத்தில் கண்வைக்கவும்.

விருச்சிகம்: பொய்க்கோபம் காட்டிய ஒருவர் இன்று உம்முடன் இணைந்து வருவதற்கு முற்படுவார். காதல் ஜோடிகளுக்குப் புதிய ஆதரவுகள் கிடைக்கலாம். வாழ்க்கையில் வசந்தம் நிலவும்.

தனு: அடுத்தவரை நம்புவதால் ஆபத்து மிகவும் உண்டு. வீண் செலவு வேண்டாம். விபரீதம் விளைந்திடும்.

மகரம்: மனம்போல் வாழ்வு இன்று மலரும். கடமையாற்றுமிடத்தில் சகதொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். இலருக்குப் பதவி உயர்வுக்கும் இடம் உண்டு. முயற்சியால் முன்னேற்றமுண்டு.

கும்பம்: தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவை தாராளமாகப் பெறுவீர்கள். சகதொழிலாளர் மத்தியில் ஆதரவு பெருகும். குடும்பத்திலும் இனிமையான சம்பவங்கள் உண்டு.

மீனம்: எழுத்தாளர்களுக்கு தெம்பான தினம். பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் அதிக பயனடைவர். நீண்டநாள் எதிர்பார்த்த பொருள்வரவு இன்று கிடைக்கும். அறிஞர் ஆலோசனையும் கிடைக்கலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

சங்கக்கடை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

திருடர்கள் அங்கிருந்த சுமார் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான உடமை வகைகளைச் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இத் திருட்டுச் சம்பவம் பற்றி அனலைதீவுக் [illegible] பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிசார் [illegible] விரைந்து விசாரணை நடாத்தினர். (உ)

பரியோவான் கல்லூரி

விளையாட்டுப் போட்டி: 'தொம்ஸன்' இல்லம் சாம்பியன்

(அரியாலை)

யாழ் பரியோவான் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டியில் தொம்சன் இல்லம் 256 புள்ளிகளைப் பெற்று சம்பியனாகியது. ஹண்டி இல்லம் 222 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும் பாஜிற்றர் இல்லம் 221 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும், பேக்கின் இல்லம் 183 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும், பீற்றோ இல்லம் 168 புள்ளிகளைப் பெற்று ஐந்தாம் இடத்தையும் பெற்றன.

புதிய சாதனைகள்:

செல்வன் வி. டி. விமலராஜ் 16 வயதுப் பிரிவில் 200 மீற்றர் தூரத்தை 27 செக்கனில் ஓடியும் ஓடியும் செல்வன் விக்சன்ற் ஜெயக்குமார் 17 வயதுப் பிரிவில் 200 மீற்றர் தூரத்தை 16 2 செக்கனில் ஓடியும் 19 வயதுப் பிரிவில் செல்வன் எஸ் விஜயராகவன் 200 மீற்றர் தூரத்தை 25 3 செக்கனில் ஓடியும், 16 வயதுப் பிரிவில் செல்வன் எஸ் தேவரஞ்சன் நீளப் பாய்தலில் 16' 3'' தூரத்தைப் பாய்ந்தும், 17 வயதுப் பிரிவில் செல்வன் யே எம். யோசேப் நீளம்பாய்தலில் 18' 7'' தூரத்தைப் பாய்ந்தும் 19 வயதுப் பிரிவில் செல்வன் எஸ். இறிகணதாஸ் நீளப் பாய்தலில் 19' 9'' அங்குல தூரத்தைப் பாய்ந்தும் புதிய சாதனைகளை நிலைநாட்டினார். 3000, 1500 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் செல்வன் ஏ. ஜெப்ரிசனும், 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் செல்வன் ஜெகி யூட்டும் முதலாம் இடங்களைப் பெற்றனர்.

கயிறிழுவைப் போட்டியில் தொம்சன் இல்லமும், அஞ்சல் ஓட்டப் போட்டியில் தொம்சன் இல்லமும், இல்ல அலங்காரிப்புப் போட்டியில் தொம்சன் இல்லமும் முதலாமிடத்தைப் பெற்றது.

சாம்பியன்கள்

13 வயதுப் பிரிவில் செல்வன் ஏ. சி. சேகரனும், 14 வயதுப் பிரிவில் செல்வன் பி. பிரதீபனும், 15 வயதுப் பிரிவில் செல்வன் ஏ. சுமந்திரனும், 16 வயதுப்பிரிவில் செல்வன் ஏ. அருணனும், 17 வயதுப் பிரிவில் செல்வன் ஜே. எம். யோசேப்புவும், 19 வயதுப் பிரிவில் செல்வன் எஸ். குறிகணதாஸ் எஸ். விஜயராகவன், எல். கருணகுமார், வி. வசந்தன் ஆகியோர்கள் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களையும், கிண்ணங்களையும், கேடயங்களையும் திருமதி எஸ் பி. சிவபாதம் வழங்கினார்.

'விளையாட்டு மூலம் மாணவர்கள்

ஒழுங்கு கட்டுப்பாட்டை கற்றுக் கொள்கிறார்கள்''

[அரியாலை]

"கல்வித்துறையில் மிகவும் முன்னணியிலிருக்கும் இக்கல்லூரி விளையாட்டுத்துறையிலும் மிகவும் உயர்ந்த நிலையில் இருப்பது பாராட்டத்தக்கதாகும். விளையாட்டின் மூலம் மாணவர்கள் கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் கற்றுக்கொள்கிறார்கள். புதிய கல்வி முறையில் ஒவ்வொரு மாணவனும் விளையாட்டுத் துறையில் போதிய திறமைகாட்டவேண்டும். கல்வியிலும், விளையாட்டிலும் சிறந்துவிளங்கும் மாணவன் நாட்டின் சிறந்த பிரஜையாக மதிக்கப்படுவான்"

இவ்வாறு வடபிரதேச சிரேஷ்ட கல்வி அதிகாரி திரு எஸ். பி. சிவபாதம் யாழ் பரியோவான் கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் ஈ. சீ. ஈ. ஆனந்தராசா தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் திரு சிவபாதம் தொடர்ந்து பேசுகையில், "1960ம் ஆண்டு தொடக்கம் தனித்தியங்க முடிவுசெய்து பெற்றோர், பழைய மாணவர் ஆதரவாளர்கள் ஆகியோரின் ஆதரவுடன் சிறந்த கல்விப் பணியை ஆற்றிய இக்கல்லூரிக்கு அரசாங்கம் 1780ம் ஆண்டு மேமாதம் தொடக்கம் ஆசிரியர்களின் வேதனத்தை வழங்க முன்வந்தது. அரசாங்கம் வழங்க முன்வந்த உதவியைப்பெற்றுக் கொண்டு தொடர்ந்தும் தனது சேவையை ஆற்ற முயற்சி செய்துவரும் இக்கல்லூரியையும், இதன் அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகிறேன்"

கல்லூரி அதிபர் திரு. சீ. ஈ. ஆனந்தராசா, பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட திரு. திருமதி சிவபாதம் தம்பதிகளை வரவேற்றுப் பேசினார்.

மெய்வல்லுநர் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான தராதரப்பத்திரங்களையும், வெற்றிக்கிண்ணங்களையும் திருமதி சிவபாதம் வழங்கினார். ஈ.

விபத்து வழக்கில் பஸ் சாரதி

(ஊர்காவற்றுறை)

எதிரியின் சார்பில் எழுப்பப்பட்ட சட்ட ஆட்சேபனை காரணமாக விபத்து வழக்கொன்றில் இ. போ. ச. பஸ் சாரதி விடுதலை செய்யப்பட்டார்.

காரைநகர் பிரதான வீதியில் எதிரி செலுத்திவந்த இ. போ. ச. பஸ் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் [illegible] தவறியதாக இவ்வழக்கில் ஊர்காவற்றுறைப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் காயம் எதுவும் இன்றித் தப்பினார் என்றும் அவருடன் பிரயாணம் செய்த அவரது மகன் இவ்விபத்தின் விளைவாக மரணமானாரென்றும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. மோட்டார் சைக்கிளின் பாதுகாப்புக் கம்பி பஸ்ஸின் முன்பக்க பகுதியுடன் மோதி உடைந்திருந்ததென்றும் மோட்டார் சைக்கிள் சாரதி தூக்கி வீசப்பட்டாரென்றும் சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்த வேலுப்பிள்ளை இராசையா விபத்தைப்பார்த்த சாட்சியான ஆறுமுகம் பத்மநாதன் விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்ட பொலிஸ் சார்ஜன்ட் புஞ்சிபண்டா ஆகியோர் பொலிஸ் தரப்பில் சாட்சியமளித்தனர்.

சாட்சியம் முடிவில் குற்றச் சாட்டுப்பத்திரம் தொடர்பாக எழுப்பப்பட்ட சட்ட ஆட்சேபனையை ஏற்றுக் கொண்ட ஊர்காவற்றுறை நீதிபதி திரு. சி. கே. வன் திலகன் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

பொலிஸ் தரப்பில் சட்டத்தரணி எஸ்.சி. ஞானம் வழக்கை நடாத்தினார்.

எதிரிசார்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீகாந்தா ஆஜரானார்.

டிஸ்கா
ரேடியோ
அன்
டீ.வி
டெக்னீஷியன்ஸ்
பஸ்நிலையம்
எதிர்மேல்மாடி
உங்கள்
ரேடியோக்கள்
டேப்றெக்கோடர்கள்
மின்சார உபகரணங்கள்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
எதுவாகிலும்
உடன்சீரமைத்துக் கொள்ள,
202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு 50 சதம்
EELANAADU

பாராளுமன்றம் இன்று கூடும்போது...

(கொழும்பு)

பாராளுமன்றம் இன்று கூடும்போது தொண்டர் சமூக சேவை நிறுவனங்கள் (பதிவு செய்தல், கட்டுப்படுத்தல்) மசோதா விவாதிக்கப்பட்டு இன்றே நிறைவேற்றப்படும். இம்மசோதாவை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகள் தேவைப்படும் என்பதால் இன்று சகல எம். பி.க்களையும் பாராளுமன்றத்திற்கு சமுகமளிக்குமாறு அரசாங்க பிரதம கொறடா கேட்டுள்ளார்.

சுவைப் பிரியர்கள்
சுவைத்து மகிழ்ந்திடும்
சுவையான உணவுகளுக்கு
நகரில் நல்லதொரு
சைவ ஓட்டல்
அசோக் பவான்
112, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
பேன்: 8095

வானொலியில் பாடலை

ரசித்தபடி நடந்தவர்
ரயிலுக்குப் பலி!

[யாழ்ப்பாணம்]

டிரான்சிஸ்டர் ரேடியோவை கையில் ஏந்தியபடி பாடலை ரசித்துக்கொண்டு சென்றவர் ரயிலுக்கு பலியானார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த அப்புக்குட்டி தங்கராசாவின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

வீட்டிலிருந்து இறந்தவர் மகனுடன் ரயில்பாதையைக் கடந்துசென்றதாகவும், அப்போது மகன் ரயில் வருகிறது என்று கூறியதாகவும் அதற்குள் ரயில் தந்தையை மோதிவிட்டதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [illegible]

கல்வி அமைச்சு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவாக இயங்கும்.

முகாமைத்துவம் பிராந்திய கல்வி விவகாரங்கள் ஒரு பிரிவாக இயங்கும்.

பாடசாலை விவகாரங்கள் தொடர்பான கொள்கை வகுத்தலும் தீர்மானங்களை மேற்கொள்ளுதலும் மற்றொரு பிரிவினால் கையாளப்படும். (ம-[illegible])

நீலனின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கையில் குறிப்பிட்டார்.

நல்லூர் தொகுதி கூட்டணிச் செயலாளர் திரு. கனகசபாபதி தலைமையில் நடந்த கூட்டத்தில் தொடர்ந்து பேசிய மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கூறியதாவது:

இன்று உத்தேச மாவட்ட சபைபற்றி பலர் பல கருத்தைச் சொல்லுகின்றார்கள். நாம் கடந்த காலங்களில் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சியாக இருந்தபொழுதும் கூட எமது பிரதேசம் எமது அபிவிருத்தி எமது கையில் இருக்கவேண்டும் என்று வலியுறுத்தி வந்தோம். கடந்த அரசில் திரு. அருளம்பலம் அரசின் அதிகாரியாக இருந்தபோதும் தந்தை செல்வா தலைமையில் சென்று எமது அபிவிருத்திபற்றி நாம் கூறுவதையே கேட்க வேண்டும் என்றுகூறி வந்தோம். இன்று அதே போன்றே எமது பகுதி அபிவிருத்தியை கருத்தில் கொண்டு இன்று மந்திரிமார்களின் கூட்டங்களிலும் கலந்து கொள்கின்றோம்.

அன்று நாம் திரு. அருளம்பலத்தோடு கதைத்தமைக்காக, மக்கள் நாம் அருளம்பலத்தோடு சேர்ந்து விட்டதாக நினைக்கவில்லை. ஆனால் இன்று ஒரு சிலர் தவறாக நினைக்கின்றார்கள்.

எமது பிரதேசம் எமது கையில் இருக்க வேண்டியது அவசியம். எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் எமது பாதையிலிருந்து நாம் தவறமாட்டோம்.

மாவட்ட அபிவிருத்திச்சபை சட்டம்பற்றி எனக்கோ அன்றி ஈழவேந்தனுக்கோ [illegible]க்கோ கூடத் தெரியமாட்டாது. அது என்ன என்பது வந்த பின்னரே தெரியும். இன்றும் சரி முன்பும்சரி அரசுடன் அபிவிருத்திக்காக சேருகின்றோம் என்று கூறிச் சேர்ந்தவர்கள் என்ன அபிவிருத்தி செய்தார்கள் என்பது [illegible] எல்லோருக்குந் தெரியும். ஆனால் மனச்சாட்சி உள்ள எவரும் எம்மைக் குறை கூறமாட்டார்கள்.

அபிவிருத்தி [செய்கிறோம் என்று இன்று கூறுபவர்கள் தமது உரிமையை இழந்து அரசின் மதமொழிக்கொள்கைகளை ஏற்றுக் கொண்டே அவ்வாறு கூறுகின்றார்கள். ஆனால் இத்தகைய ஒரு நிலை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஏற்படமாட்டாது.

இடையில் இளைஞர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரம் கூறியதாவது:

அமைச்சர் தேவநாயகம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையைக் கொண்டு அதுதான் மாவட்ட அபிவிருத்திச் சபை மசோதா என்று கருதக் கூடாது. திரு. நீலன் திருச்செல்வத்தின் அறிக்கையைப் பின்பற்றியே மாவட்ட அபிவிருத்திச்சபை மசோதா தயாரிக்கப்படும் என எனக்கு ஆட்சியாளர்கள் கூறியுள்ளனர். ஆனால் அதற்கிடையில் மேற்கொள்ளப்படுகின்ற பிரசாரங்கள் யாவும் விஷமத்தனமானதாகும்.

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் கூறியதாவது: [illegible] நீக்க வேண்டுமானால் அதனைப் பொதுச்சபையில் செய்யமுடியும். பத்திரிகை அறிக்கை விடுவதன் மூலம் [illegible] நீக்கிவிடமுடியாது. வட்டுக்கோட்டை முன்னைய பாராளுமன்ற உறுப்பினர் [illegible] இருந்து தனது தொகுதிக்கு செய்ததிலும் பார்க்க [illegible] மடங்கு கூடிய அபிவிருத்தி [illegible] துள்ளேன். அரசு தமது பகுதிக்கு அபிவிருத்தி திட்டங்கள் செய்தால் எமது பகுதி வரிப்பணமும் உண்டு. அதை எமக்குத் தாவென்று கேட்டே எமது பகுதி அபிவிருத்தியை மேற்கொள்கின்றோம். [ ]

நவஸீரின் சாதனைமுயற்சி தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

கொடிய விஷப்பாம்புகள் இருந்தால் கொண்டு வாருங்கள் எத்தனை பாம்புகளுடனும் குடியிருக்க நான் தயாராக இருக்கிறேன்.

யாழ். ஜின்னா மைதானத்தில் கண்ணாடி அறையில் கடந்த இரண்டு நாட்களாக இருபதுக்கும் மேற்பட்ட கொடிய விஷப்பாம்புகளுடன் குடியிருக்கும் ஜனாப் பரீத் நஸீர் கூடியிருந்தவர்களிடம் மேற்கண்டவாறு கூறினார்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், யாழ்ப்பாணம் எம். பி. திரு. வே. யோகேஸ்வரன், சுவீடன் தேசத்தைச் சேர்ந்த உல்லாசப் பிரயாணிகள் மூவர் ஆகியோர் நேற்றுமுன்தினம் இரவு ஜின்னா மைதானத்திற்குச் சென்று நஸீரின் சாதனை முயற்சியை நேரில் பார்வையிட்டு அவரின் முயற்சி வெற்றி பெறவேண்டுமென வாழ்த்திச் சென்றனர்.

கண்ணாடி அறையில் இருந்த நாகபாம்பொன்று நேற்று இறந்துவிட்டது. ([illegible]-ஜி)

சுவீப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

26 C 0837	27 C 0440
30 C 0362	33 C 0923
05 D 0145	06 D 0938
11 D 0416	21 D 0217
25 D 0701	29 D 0341
03 E 0653	09 E 0322
20 E 0038	33 E 0333
35 E 0075	05 F 0324
09 F 0190	22 F 0455
31 F 0515	
03 G 0045	14 G 0680
22 G 0384	28 G 0812
08 H 0696	21 H 0303
24 H 0543	28 H 0340
13 J 0720	23 J 0160
35 J 0237	01 K 0055
04 K 0317	11 K 0801
15 K 0589	17 K 0263
21 K 0134	06 L 0672
08 L 0079	15 L 0026
20 L 0025	25 L 1821
23 L 0514	25 L 0439
24 M 0099	25 M 0353
26 M 0[illegible]06	03 N 0315
05 N 0967	23 N 0399
08 O 0283	02 P 0082
27 P 0675	33 P 0355
03 Q 0616	04 Q 0267
07 Q 0235	14 Q 0242
24 Q 0845	30 Q 0795
01 R 0019	05 R 0393
13 R 0046	15 R 0624
25 R 0298	11 T 0767
05 U 0362	02 U 0114
27 U 0903	27 U 0995
03 V 0369	06 V 0649
15 V 0011	19 V 0028
31 V 0455	05 W 0337
09 W 0742	11 W 0170
17 W 0306	21 W 0185
34 W 0887	20 X 0677
21 X 0614	26 X 0804
01 Y 0219	23 Y 0134
09 Z 0479	21 Z 0164
35 Z 0345	

[இவை யாவும் உறுதிப் படுத்தப்படவேண்டும்]

இலட்சியத்துக்கு பாதிப்பு இல்லாமல்

"மக்கள் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்வோம்"

(மாவிட்டபுரம்)

"நாம் ஒரு குறிக்கோளை முன்வைத்து அதற்கான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் மக்களது அன்றாடத் தேவைகளையும் கவனிக்க வேண்டிய பொறுப்பும் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் எமக்கு உண்டு. இலட்சியப் பயணத்திற்கு பாதிப்பு ஏற்படாதவகையில் மக்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் தவறு இருக்க முடியாது"

இவ்வாறு காங்கேசன்துறை தொகுதி கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கான விவசாய தெளிகருவிகள் தையல்மெஷின்கள் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களிடம் அவற்றைக் கையளித்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறைப் பிரதிநிதியுமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாதேவா தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

தமிழ்மக்கள் பொருளாதாரத்துறையில் இன்று மிகவும் பின்தங்கிய நிலையை அடைந்துள்ளனர். கைத்தொழில் விவசாயம் என்பன [illegible] வருகின்றன. வசதிகள் வாய்ப்புகள் நிதியுதவிகள் போதியளவு இல்லாமல் தமிழ்ப்பகுதிகள் பின்தங்கிய நிலையை அடைவது எமது விடுதலைப்பயணத்திற்கு முட்டுக்கட்டையானதாகும். ஆகவே தான் கிடைக்கும் உதவிகளை சரியான முறையில் பயன்படுத்தி எமது பகுதிகளை முன்னேற்றுவதிலும் நாம் கவனம் எடுக்கவேண்டியுள்ளது.

எமது முதற்பணி விடுதலைக்கான பணி என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் அன்றாடத் தேவைகளுக்காக மக்களது தேவைகளையும் நாம் செய்துகொடுப்பது நமது கடமை. சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பதுபோல மக்கள் பொருளாதாரத்துறையில் மேம்படுவதும் எமது விடுதலைக்கான ஓர் அத்திவாரமாகும். பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியிலிருந்து நாம் தெரிவுசெய்து பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அண்மையில் இது தொடர்பாக கச்சேரியில் நடந்த மகாநாடொன்றில் கூட நாம் கலந்து ஆலோசனைகள் வழங்கினோம். எமது மக்களது பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான பணியில் நாம் ஒருபோதும் பின்நிற்க மாட்டோம்.

இவ்வாறான உதவிகள் எல்லாம் நிரந்தரமானவையல்ல. இன்றைய மாற்றாரிடம் கையேந்திப் பெறும் நிலையை நீக்கி நாம் சுதந்திரமாகச் சொந்தக்காலில் நிற்கும் நிலை ஏற்படுத்தவேண்டும். இப்பணியில் கிராம அபிவிருத்திச் சங்கங்களது பங்கும் முக்கியமானது என்றார்.

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு க. மகாதேவா தமது தலைமையுரையில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதிகளில் கிராமங்களின் அபிவிருத்திக்காக அதிகநிதி ஒதுக்கீடுகளை காங்கேசன்துறைப் பிரதிநிதி ஒதுக்கிக் கொடுத்தது பாராட்டுக்குரியதென்றும் கிராமவளர்ச்சியே நாட்டின் வளர்ச்சியென்றும் குறிப்பிட்டார்.

வலி வடக்கு கிராம அபிவிருத்தி அதிகாரி திரு க. சிவரத்தினம், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு எஸ். [illegible]வும் பேசினார்.

பொலித்தீன்...

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

கொண்டுசெல்லுமாறு பணித்து, சட்டவைத்திய அதிகாரியை பிரேத பரிசோதனைசெய்யுமாறு உத்தரவிட்டதுடன், பொலிசாரை தொடர்ந்து விசாரணைசெய்யுமாறு மரணவிசாரணை அதிகாரி [illegible] விசாரணையை ஒத்திவைத்தார். ([illegible])

வீதியால்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

வேளை இவ்வழிப்பறி சம்பந்தமாக சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்று அவ்விடத்தில் சந்தேகநபர்களில் ஒருவர் விட்டுச்சென்றதாகக் கருதப்படும் ஒருசோடி செருப்பைக் கைப்பற்றினர்.

வழிப்பறியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இரு இளைஞர்களைத் தேடிப் புறப்பட்ட பொலிசார் கந்தர்மடம் அரசடி வீதியைச் சேர்ந்த கோழி அல்லது ராசன் என்றழைக்கப்படும் பொன்னம்பலம் இரத்தினராசா என்பவரைக் கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்தியபோது ஒட்டுமடத்தில் கண்டெடுக்கப்பட்ட ஒரு சோடி செருப்புத் தன்னுடையது என்பதை அந்நபர் ஒப்புக்கொண்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் அடையாளஅணிவகுப்பிற்குட்படுத்தப்படவுள்ளார். மற்றொரு சந்தேகநபரைத்தேடிப் பொலிசார் வலைவிரித்துள்ளனர். [செ-ஜி]

வான் விபத்தில் இருவர்காயம்

[கேகாலை]

[illegible] நேற்றுப் பிற்பகல் தனியார் வான் விபத்தில் பிரயாணி இருவர் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [ஈ]

[illegible] Registered as a Newspaper [illegible] CB/8948 [illegible]
Post Box No. 49, Telegrams: "Eelanadu", Phone [illegible]